
# 4.2 அவரவர் மொழியில் திருவிவிலியம்





''விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும்
ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா''.
மத்தேயு 24:35

திருவிவிலியத்தில் உள்ள அறுபத்தாறு நூல்களும் பல்வேறு இறை அடியார்களால் இறை உந்துதலில் எழுதப்பட்டு, ஒரே நூலாக இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருவிவிலியம் உலகின் ஒவ்வொரு மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருவிவிலியம் அனைத்து மக்களுக்கும் அவரவர் சொந்த மொழியில் கிடைத்திருப்பது பெரும் மகிழ்ச்சிக்குரியதல்லவா?

இஸ்ரயேலரின் இறை நம்பிக்கை, வரலாற்றுப் பார்வையோடும், இலக்கியமாகவும், பாடல்களாகவும், மறைபொருள் இலக்கியமாகவும், வாய்மொழிப் பாரம்பரியத்தில் வழங்கப்பட்டு, பிற்காலத்தில் எழுத்து வடிவம் பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இருப்பினும் திருவிவிலியம் பல்லாண்டு காலமாக பொது நிலையினரின் கரங்களுக்கு கிடைக்கவில்லை ஏனெனில் திருவிவிலியத்திற்கு பொருள் கூறும் பொறுப்பு அருட்பொழிவு பெற்ற ஆயர்களை மட்டுமே சார்ந்திருந்தது.

## திருவிவிலியம் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது

கி.மு நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் மக்களின் தேவையைக் கருதி கிரேக்க பேரரசராகிய மா அலெக்சாண்டர் எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு நூல்களை கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கச் செய்தார். இன்னும் சிலர் மா அலெக்சாண்டரின் தளபதிகளில் ஒருவராய் இருந்து பின்பு அரசரான தாலமி என்பவரின் ஆலோசனையின்படி கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தனர் எனும் கருத்தை தெரிவிக்கின்றனர். இதில் 70 அறிஞர்கள்



இலவச விநியோகத்திற்காக

ஈடுபட்டதால் LXX அல்லது ‘‘ செப்துவஜிந்து ” (Septuagint) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. ஆர்மேனிய, எத்தியோப்பிய மற்றும் அராபி மொழிகளிலும் திருவிவிலியம் படிப்படியாக மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டவர் இயேசு வாழ்ந்த காலத்தில் பலஸ்தீனம் உரோம பேரரசுக்கு அடிமைப்பட்டு இருந்தது. அக்காலத்தில் அவர்களின் ஆட்சி மொழியான இலத்தீன் மொழியில் திருவிவிலியம் மொழி பெயர்க்கப்பட்டது. இச் செயலை துறவற குருவான தூய எரோம் என்பவர், சிறப்பாக எபிரேய மொழியைக் கற்று மொழி பெயர்ப்புச் செய்தார். இம்மொழி பெயர்ப்பு ‘‘வல்கேட் ’’ என அழைக்கப்படுகிறது. வல்கேட் என்பதன் பொருள் ‘பொது’ என்பதாகும்.

இங்கிலாந்தில் வாழ்ந்த பீட் போதகர் மரணம் அடைவதற்கு முன்பு யோவான் நற்செய்தியை மொழி பெயர்த்தார்.

**ஆங்கில மொழியில் திருவிவிலியம்**

பதினான்காம் நூற்றாண்டில் ஜோன் வைக்கிளிப் என்னும் போதகர் திருவிவிலியத்தை இலத்தின் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார். 1526 இல் விலியம் டின்டேல் ஆங்கில மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து அச்சிட்டார்

**ஜேர்மனிய மொழியில் திருவிவிலியம்**

பதினாறாம் நூற்றாண்டில் மார்டின் லூதர் போதகர் எபிரேய மொழியிலிருந்து பழைய ஏற்பாட்டையும், கிரேக்க மொழியிலிருந்து புதிய ஏற்பாட்டையும் ஜேர்மனிய மொழியில் மொழி பெயர்த்தார்.

**தமிழ் மொழியில் திருவிவிலியம்**

1759 ஆண்டு ஒல்லாந்தர் காலத்தில் புதிய ஏற்பாடு தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. 1936 ஆண்டு முழுத் திருவிவிலியமும் தமிழில் அச்சிடப்பட்டது.

**சிங்கள மொழியில் எழுதப்பட்ட திருவிவிலியம்**

1780 ஆண்டு ஒல்லாந்தர் காலத்தில் முழு திருமறையும் சிங்கள மொழியில் அச்சிடப்பட்டது.


இலவச விநியோகத்திற்காக

## திருவிவிலிய மொழி பெயர்ப்பாளர் சார்பான குறிப்பு

### தூய எரோம் கி.பி 345 - 420



- இவர் ஒரு துறவி
- இவர் இலத்தீன் மொழியில் திருவிவிலியத்தை மொழிபெயர்க்கத் தொடங்கி 12 ஆண்டுகள் கடுமையாக உழைத்து இப்பணியை நிறைவு செய்தார். இம்மொழி பெயர்ப்பு " வல்கேட் " என அழைக்கப்பட்டது.
- இப்பணியை மேற்கொள்ள நீண்ட காலம் பலஸ்தீனாவில் வாழ்ந்து எபிரேய மொழியை நன்றாகக் கற்றுக்கொண்டார்.

### ஜோன் வைகிளிப்




- 14ம் நூற்றாண்டில் திருவிவிலியத்தை ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கத் தொடங்கினார்.
- எழுத்தறிவு மிகவும் குறைந்த மக்களுக்கு திருவிவிலியத்தை தருவதற்கு முனைந்தார். இவருக்கு ஒரு போதகர் குழு ஒத்துழைப்பு வழங்கியது.
- இப்பணி நிறைவேறும் போது திரு அவைத் தலைவர்கள் திருவிவிலியத்தை மொழிபெயர்ப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மொழிபெயர்ப்பை எரித்து சாம்பலாக்கினர். இருப்பினும் அடிமட்ட மக்களுக்கு திருவிவிலியத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தினால் மிகவும் துணிவுடன் இப்பணியை நிறைவு செய்தார்.
- இவரது பணிக்கு சமூகத்தின் பிரபுக்கள் உதவி புரிந்தனர். 1384ம் ஆண்டு இவர் மரணம் அடைந்தார். ஆயினும் இவரது புகழ் நீடித்து நிலைத்தது.
- ஜோன் வைக் கிளிப் மரணமடைந்து 44 ஆண்டுகளுக்கு பின் அவரைக் கல்லறையிலிருந்து தோண்டி எடுத்து மீண்டும் எரித்தனர்.



இலவச விநியோகத்திற்காக

## வில்லியம் டிண்டேல்



- எபிரேய மொழிலிருந்த பழைய ஏற்பாட்டையும் கிரேக்க மொழியில் இருந்த புதிய ஏற்பாட்டையும் தம்முடைய ஆங்கிலமொழிபெயர்ப்புக்காகப் பயன்படுத்தினார்.

- 1526 ம் ஆண்டு இவரின் மொழிபெயர்ப்பைத் தாங்கிய புதிய ஏற்பாடு அச்சிடப்பட்டது. புதிய ஏற்பாட்டின் பல பிரதிகள் மிகவும் மறைவாக இங்கிலாந்தில் விநியோகிக்கப்பட்டன. ஆயினும் திரு அவைத் தலைவர்கள் தங்களுக்குக் கிடைத்த பிரதிகள் எல்லாவற்றையும் எரித்தனர்.

- இதன் பின்பு பழைய ஏற்பாடு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பணி தொடங்கியது.

- 1530ம் ஆண்டளவில் பஞ்சகாமத்தின் (ஐந்தாகமம்) மொழிபெயர்ப்பு பணி நிறைவு பெற்றது.

- இவை நூல்களாக வெளிவருவதற்கு முன்பு எட்டாம் ஹென்றி அரசனால் கைது செய்யப்பட்டார்.

- 1660ம் மாதங்கள் இருட்டறையில் சிறை வைக்கப்பட்டார். அவரது பகைவர் கைகளில் ஒப்படைக்கப்பட்டு 1536ம் ஆண்டு எல்லோர் முன்னிலையிலும் தூக்கில் இடப்பட்டு அதன் பின்பு எரியூட்டப்பட்டார்.

- இவர் மரணத் தருவாயில் ‘‘ ஆண்டவரே இங்கிலாந்து அரசனின் கண்களைத் திறந்தருள்வீராக ” என்று மன்றாடினார்.

- இவரின் மன்றாடல் நிறைவேறியது எனலாம். இவரைக் கொல்லும்படி கட்டளையிட்ட அரசனே பின்பு திருவிவிலியத்தை முழுமையாக மொழிபெயர்க்கும்படி கட்டளை இட்டார்.

- 1536ம் டின்டேல் அவர்களின் மொழிபெயர்ப்பை ஒட்டி எழுதப்பட்ட ஆங்கில திருவிவிலியம் அனைத்து திரு அவைகளிலும் இருத்தல் வேண்டும் என்ற அரசகட்டளை பிறப்பிக்கப்பட்டது.

## மார்டின் லூதர்



- இவர் ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்தவர். இவர் சீர்த்திருத்த தந்தைகளில் ஒருவர் என அழைக்கப்படுகிறார். (1517) அக்டோபர் 31 உலக சீர்த்திருத்த நாள் எனக் கொண்டாடப்படுகின்றது.
- எபிரேய மொழியில் இருந்த பழைய ஏற்பாட்டையும் கிரேக்க மொழியில் இருந்த புதிய ஏற்பாட்டையும் ஜேர்மனிய மொழியில் மொழிபெயர்த்தார்.

மேற்காணும் தகவல்களை ஊன்றிக் கவனிக்கும் போது ஓர் உண்மை நமக்கு தெளிவாகிறது.

திருவிவிலியத்தை மொழி பெயர்த்த பல்வேறு அடியவர்களும் கொடுமையான முறையில் மரணம் அடைந்ததாக தெரிகிறது. இன்னும் சிலர் அதிக துன்பம் ஏற்றனர். மிகவும் கடினப்பாடுகளின் நடுவில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியத்தை நாம் நாள்தோறும் செம்மையாகக் கற்று அவற்றை நமது வாழ்வை பொருளுள்ளதாக மாற்ற பயன்படுத்துவதே நன்மை தரும்.

### செயல்பாடு

1. *திருவிவிலிய மொழி பெயர்ப்புத் தகவல் அடங்கிய விபரங்களை ஓர் சிறிய கைந்நூலாகத் தயாரிக்கவும்.*
2. *“திருவிவிலிய மொழி பெயர்ப்பின் பயன்பாடு” எனும் தலைப்பில் ஒரு கடிதம் எழுதவும்.*



இலவச விநியோகத்திற்காக